THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, but not recently. The misappropriation which was discovered in August 1956 related to the period 1955–56;

(*b*) One case. The amount involved was Rs. 1,764·87 nP.;

(*c*) The full amount has been recovered. The person responsible was dismissed from service on 21st December 1956; and

(*d*) Suitable instructions have been issued to prevent repetition of such incidents. The Central Cash Bureau has been strengthened and reorganized with effect from 15th December 1956.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know, Sir, from the Hon. Minister how exactly this kind of thing happened and how did it escape the notice of the officers concerned?

THE HON. SRI C. SUBRAMANIAM : To explain how exactly this happened, I will have to give the details as to how this Central Cash Bureau works. This is an orgnization intended for the purpose of disbursing the salaries of the non-gazetted personnel in the Secretariat. With reference to officers who take leave and for whom leave salary is payable, they have to get the authorization of the officers concerned for the disbursement of the leave salary. Some forged authorizations were used in those cases for the purpose of taking payment of leave salary. In certain cases, where leave salaries were not due, leave salaries were drawn from the treasury, and they were misappropriated. This is an eternal struggle between the rules and the crooks. We frame rules and crooks find way to overcome these rules, and we are trying to plug the loopholes. We have tried to plug the loopholes.

SRI A. GOVINDASAMY : இந்த பணத்தை கையாடல் செய்தவரை வேலையிலிருந்து நீக்கப்பட்டது என்று சொன்னார்கள். அவர் கையாடிய பணத்தை எல்லாம் திருப்பி தரப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பூரா பணமும் தரப்பட்டது.

Magnesite

* 57 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the extraction of Magnesite from the Salem Chalk Hills is to be entrusted to a foreign company for a further period of thirty years; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No such decision has been taken.

(*b*) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : அப்படி கொடுக்காமல் பப்ளிக் செக்டரில் எடுத்து நடத்துவோம் என்று ஒரு உறுதி கொடுக்க முடியுமா ?

1st November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி ஒரு உறுதியும் இப்போது கொடுக்க முடியாது. அந்த யோசனையும் இருந்து வருகிறது என்று மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இப்போது இந்த குத்தகை காலம் முடிவடையப் போவதால் இனிமேலும் சர்க்காரே இந்த சேலம் மாக்னிஸைட் ஸிண்டிகேட் கம்பெனியை எடுத்து நடத்த போகிறார்களா அல்லது, சர்க்காரும் வேறு கம்பெனிகளும் சேர்ந்து கார்ப்பரேஷனை நடத்தப் போகிறார்களா என்கிற விபரத்தை சொல்லுவார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த சேலம் மாக்னஸைட் ஸிண்டிகேட் கம்பெனியின் குத்தகை காலம் 1959 ஜனவரியோடு முடிவடைய போகிறது. இதைப் பற்றி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அறிவித்தது. இதில் ரிப்ராக்டரி பிரிக்ஸ் செய்வதைப்பற்றி மத்திய சர்க்கார் சென்னை ராஜ்ய சர்க்காரை கேட்டார்கள். இதற்கு " பர்ன் அண்ட் கம்பெனி" க்கு கொடுக்கலாமா என்பதைப் பற்றி கேட்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

SRI N. K. PALANISAMI : இந்த மாதிரி எடுத்துக் கொள்வது யார் என்று முடிவு செய்யப்படாமல் இருக்கும் நேரத்தில் 13 லட்சம் ரூபாய் " பர்ன் அண்ட் கம்பெனி " க்கு கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இவ்விதம் கொடுக்கப்பட்டிருப்பது ஏன் ?

THE HON. SRI R. VENKATARAMAN: தனியார் எவ்வளவு பணம் கொடுத்தாலும் அதை தடுப்பதற்கு சர்க்காருக்கு எந்த விதமான உரிமையும் இல்லே. குத்தகை மாற்றுவதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளுமா என்பது தான் பிரச்னை. சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாது என்றுதான் முடிவு செய்து விட்டார்கள்.

SRI M. R. KANDASAMI MUDALIAR : இப்போது, இந்த ஸிண்டிகேட்டை சர்க்கார் எடுத்து நடத்தலாமா என்பது பரிசீலனையில் இருக்கும் போது, சர்க்கார் மேதா கம்பெனிக்கு மறுபடியும் 20 வருஷக் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். இதை அரசாங்கமே எடுத்து நடத்தக் கூடும் என்ற அபிப்பிராயம் இருக்கும்போது இதை ஏன் தனியார் துறைக்கு விட வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். 9-40 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : குத்தகை முடிவடைகின்ற ஸிண்டிகேட் நிலம் சம்பந்தமாக சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. குத்தகை நடை முறையில் இருக்கும் கம்பெனியைப் பற்றி இன்னும் எந்த நடவடிக்கையும் (முடிவும்) எடுக்கவில்லை.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் கூறிய பதிலிலிருந்து, இந்த கம்பெனிக்குச் சொந்தமான தொழிற்சாலைகளை மட்டும் தான் பர்ன் கம்பெனிக்கு விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது தான் உண்மை என்று நினைக்கிறேன். சர்க்காருக்குக் குத்தகைக்கு விடப்பட்ட நிலம் சம்பந்தப்பட்ட மட்டில், சர்க்கார் என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், சர்க்காருக்கு அவர்கள், மாக்னஸைட்டுக்காகக் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு ? அவர்கள் இது வரையிலும் எவ்வளவு டன் மாக்னஸைட் எடுத்தார்கள்? அவர்கள் வருஷத்தில் எவ்வளவு டன் மாக்னஸைட் எடுத்திருக்கிறார்கள் என்றும், எவ்வளவு பணம் செலுத்தப்பட்டது என்றும், எடுக்கப்பட்ட மாக்னஸைட்டின் அளவிற்கு தகுந்தபடி பணம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்றும் கணக்குப் போட்டுப் பார்க்கப்பட்டதா? எந்த ரெவின்யு அதிகாரி கணக்குப் போட்டுப் பார்த்தார்?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் கேட்ட முதல் கேள்வி " மாக்னஸைட் ஸிண்டிகேட் பாக்டரியை மாத்திரம்தான் விற்றார்களா? " என்பது ஆகும். அவர்களுடைய விற்பனைப் பத்திரத்தைப் பார்க்கும்போது பாக்டரியையும் அவர்களுக்கு எஞ்சியிருக்கும் 'லீஸ்'

பகுதியையும் விற்றிருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு லீஸ்பகுதியை விற்றிருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு லீஸ் பகுதியை விற்பதற்கு அதிகாரம் இல்லை என்று சர்க்கார் மறுத்து விட்டது. இரண்டாவது, அவர்கள் வருஷத்திற்கு எவ்வளவு டன் மாக்னஸைட் எடுக்கிறார்கள் என்றும், எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டது என்றும் முன்பு ஒரு கேள்விக்கு பதில் சொன்னேன். இது பற்றி மீண்டும் தனிக் கேள்வி கேட்டால் புள்ளி விவரங்களுடன் பதில் சொல்லுவேன்.

Sri M. P. SUBRAMANIAM : மத்திய அரசாங்கம் கல்கத்தாவிலுள்ள பர்ன் கம்பெனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கேற்ப, சேலத்திலுள்ள இந்தச் சுண்ணும்பை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நமது அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து வற்புறுத்தல் வருவதாக முன்பு ஒரு முறையே கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது மத்திய அரசாங்கமும் இந்தக் கம்பெனியும் சேர்ந்து தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பெரிய கம்பெனியாக இருக்கும் பர்ன் கம்பெனியைப் போன்று இல்லாமல், சென்னை அரசாங்கமே இதை ஏன் எடுத்து நடத்த முன் வரக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கம் வற்புறுத்தியது என்று கனம் அங்கத்தினர் சொன்னது சரியல்ல. மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்தது என்பது தான் சரியான மொழி ஆகும். அடுத்தபடியாக, இதை சென்னை அரசாங்கமே நடத்த வேண்டுமா என்பதை நமது அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், சென்னை அரசாங்கம், மத்திய அரசாங்கம் எல்லாம் சேர்ந்து ஒரு பெரிய கம்பெனி வைத்து நடத்தினால் சென்னை அரசாங்கத்திற்கு அது அதிக லாபகரமாக இருக்குமானால், அந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ளலாம் என்பது தான் மக்களின் அபிப்பிராயமாக இருக்கும்.

Sri V. SANKARAN : மாக்னஸைட்டின் உபயோகங்கள் என்ன என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

Mr. SPEAKER : The hon. Member may put a separate question.

The Standard Motor Products Company (India), Limited

* 58 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) what protection do the Madras Government give to the Standard Motor Products Company (India), Limited ; and

(*b*) in what ways ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) None, Sir.

(*b*) Does not arise.

Sri V. K. KOTHANDARAMAN : சென்னை சர்க்கார்தான் ஒரு வேளை அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை என்று சொன்னாலும் மத்திய சர்க்காராவது ஏதாவது பாதுகாப்பு கொடுக்கிறதா என்பதையாவது கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : மத்திய சர்க்கார், இந்தியாவில் மோட்டார் உற்பத்தி செய்கிற தொழில் அபிவிருத்தியடைய வேண்டும் என்பதற்குப் பாதுகாப்பு அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.